## தலைப்பு 11 – நிதி ஆணைக்குழு அலுவலகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 16 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு அலுவலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையால் மற்றும் கொரோனா தொற்று நோய் நிலைமையில் செலவுகள் குறைக்கப்பட்டதன் காரணமாக ஒரு மீண்டெழும் செலவு விடயத்தில் ரூபா 600,000 முழுமையாகத் தேறிய ஒதுக்கத்தில் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 02 மூலதனச் செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 600,000 ஆன் முழுமையான ஒதுக்கங்களும் சேமிக்கப்பட்டிருந்தன. மேலும் மூலதனச் செலவு விடயத்தின் மொத்த ஒதுக்கங்களில் 97 சதவீதம் அதாவது ரூபா 970,908 ஆனது சேமிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் வருடத்திற்கான மதிப்பீடு தயாரிக்கும்போது வெளிநாட்டு வாய்ப்புக்களுக்காக ஒதுக்கங்கள் ஒதுக்கப்படுதலானது கொரோனா தொற்று நோய் நிலைமை காரணமாக 1102 செலவு விடயத்தில் தேறிய ஒதுக்கம் சேமிக்கப்பட்டிருந்தது. அரச நிதி முகாமைத்துவத்திற்காக அரசினால் வழங்கபட்டிருந்த ஆலோசனையின் பிரகாரம் அத்தியாவசியமற்ற செலவுகளைப் பிற்போட வேண்டி ஏற்பட்டது. மேலும் இயந்திரங்கள் மற்றும் கட்டிடங்களின் பயன்பாடு மட்டுப்படுத்தப் பட்டமையால் செலவு விடய இலக்கம் 2001 மற்றும் 2002 செலவு விடயங்களின் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன.<br><br>2021 ஆம் வருடத்தில் திட்டமிடப்பட்டிருந்த பயிற்சி செயற்திட்டங்கள் பல நாட்டில் நிலவிய தொற்று நோய் நிலைமை காரணமாக நடாத்தப்படாமையால் 2401 இன் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தது. | செலவு மதிப்பீடு முறையாகத் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(ஐ)(4) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் பணியொன்றாக மாகாணங்களுக்கு வருடாந்தம் வழங்கப்படுகின்ற நிதியம் மாகாணங்களுக்கிடையே விநியோகிக்கப்படுகின்ற கொள்கை மற்றும் மாகாணங்களின் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக சனாதிபதியால் அனுப்பப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக சனாதிபதிக்கு பரிந்துரைகளை சமர்ப்பித்தல் என்பன குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஆணைக்குழுவினால் அப்பணி தொடர்பாக 154(ஐ)(6) பிரகாரம் அதன் வேலை நடைமுறையை முடிவு செய்ய வேண்டியுள்ள போதிலும் அவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசியலமைப்பின் மூலம் நிதி ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல்முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. வருடாந்தம் ஏற்படுகின்ற மாற்றங்கள் செய்யப்பட்டு அம்முறைமையின் பிரகாரம் நிதி ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அரசியலமைப்பின் 154(ஐ)(6) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆணைக்குழுவின் அதிகாரச்சட்டம் தயாரித்தலானது மீளாய்வாண்டின் இறுதி வரையில் முடிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அரசியலமைப்பு திருத்தத்தின் பின்னர் இது பற்றி பரிசீலிக்க முடியுமெனவும் கடந்த 30 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்குள் நடவடிக்கை எடுக்கப்படுகின்ற முறையில் எதிர்காலத்தில் செயற்படுத்த முடியுமென்பதை புதிய தலைவர் தெரிவித்துள்ளார். | அதிகாரச்சட்டத்தை தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ஆணைக்குழு அலுவலகத்தின் சிரேஷ்ட நிலையில் 02 வெற்றிடங்களும் மூன்றாம் நிலையில் 02 வெற்றிடங்களும இரண்டாம் நிலையில் 07 வெற்றிடங்களும் ஆரம்ப நிலையில் 08 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழு தவறியிருந்தது.. | சிரேஷ்ட நிலையில் மற்றும் இரண்டாம் நிலையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைளை எடுக்குமாறு பல தடவைகள் பொது நிர்வாக அமைச்சிடம் கோரிக்கை விடுவிக்கப்பட்டிருந்தும் அதற்கான அதிகாரிகளை அனுப்பவில்லை என்பதுடன் இது எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயமொன்றாகும்.<br>ஆரம்ப நிலையின் வெற்றிடங்களுக்காக பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்ல் படையினரால் பயிற்சிக்காக 07 அதிகாரிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட பயிற்சி முடிவடைந்ததன் பின்னர் அப்படையினரால் அவர்கள் இந்நிறுவனத்திற்கு இணைக்கப்படுவார்கள் எனக் குறிப்பிடப்படடிருந்தது. | தேவையான பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |